**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**முன்னிலை: செல்வி.A. யுகாதிமரியா, B.Com.L.L.B(Hons.,)**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை.**

**2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 16 ம் நாள் திங்கள்கிழமை**

**அசல் வழக்கு எண்.40/2025**

**இ.ம.எண்.4/2026 in இ.ம.எண்.3/2025**

1) முருகேசன்

2) ராமாயி

3) கார்த்திக்

4) சிலும்பாயி

5) வடிவேல் **...மனுதாரர்கள்/ வாதிகள்**

**/எதிர்/**

1) பார்வதி

2) ராமகிருஷ்ணன் **..எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்**

இம்மனுவானது எனது முன்னிலையில் கடந்த 26.02.2026ம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.B.மலர்கண்ணன் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 2 வரையான எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.B.தியாகராஜன் அவர்கள் முன்னிலையாகியும் மற்றும் இரு தரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்:

**உத்தரவு**

இம்மனுவானது, மனுதாரர்களால் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 7, விதி 14(A)ன் கீழ் மேற்படி இடைக்கால மனுவில் மனுதாரர்கள்

தரப்பில் கூடுதல் ஆவணங்கள் தாக்கல் செய்ய அனுமதி வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>மனுதாரர் மனுவின் சுருக்கம்:</u>**

**2)** இம்மனுவின் 3ம் மனுதாரர், அசல் வழக்கில் 3ம் வாதியாவார். மற்ற வாதிகளுக்கும் சேர்த்து இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி அசல் வழக்கானது, மனுதாரர்கள்/வாதிகளால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக, தாவா சொத்தைப் பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்களில், பிரதிவாதிகள் வீண் இடையூறு செய்யாது இருக்கும் பொருட்டு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி அசல் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கின் பிரதிவாதிகள், மனுதாரர்கள் அமைத்துள்ள நிலத்தடி குடிநீர் குழாய் மற்றும் அதன் மீதான பாதையை அழிக்கும் நோக்கில் செயல்பட்டு வருவதால், மனு சொத்துக்களைப் பார்வையிட்டு, அதன் பூஸ்துதி நிலைகள் மற்றும் நிலத்தடி குடிநீர் குழாய் ஆகியவற்றைப் பொறுத்து நீதிமன்ற ஆணையர் மூலம் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்து இந்நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்த இடைக்கால மனு எண்.3/2025 மனுவானது இம்மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது.

**3)** இடைக்கால மனு எண்.3/2025 விசாரணையின் போது, மனுவில் கண்ட ஆதரவுகளை தாக்கல் செய்ய வேண்டி வழக்கறிஞர் கூறியதன் அடிப்படையில், இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆதரவுகள் மனுதாரர்களுக்கு தற்போதுதான் கிடைக்கப்பெற்றது. மேற்படி ஆதரவுகளை தாக்கல் செய்ய தவறிய தவறுகையை மன்னித்து ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியமும், நியாயமுமாய் இருக்கிறது. இம்மனுவிற்கான சமநிலை நோக்கும்,

முதல் நிலை வழக்கும் மனுதாரர்கள் பக்கமே உள்ளது. எனவே, இம்மனுவை ஏற்றுக்கொள்வதால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எவ்வித கஷ்டமும், நஷ்டமும் கிடையாது. மாறாக, இம்மனு ஏற்றுக்கொள்ளப்படாவிடில், மனுதாரர்களுக்கு ஏராளமான கஷ்டமும், நஷ்டமும் ஏற்பட்டுவிடும். எனவே, இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்மனுவுரையின் சுருக்கம்:</u>**

**4)** இம்மனுவானது சட்டப்படியும், நியாயப்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. மனுதாரர்கள் மனுவில் கோரியுள்ள பரிகாரம் மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல. மனுதாரர்களால் மனுவிலும், பிரமாண வாக்குமூலத்திலும் கூறப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானவை. கற்பனையானவை. இம்மனுவில் எவ்வித முகாந்திரமும் இல்லை. எனவே, இம்மனுவானது எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

**<u>தீர்மானிக்கப்பட வேண்டிய கேள்வி:</u>**

**5)** மனுதாரர்களின் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய கேள்வியாகும்.

**<u>சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>**

**6)** இரு தரப்பிலும் எவ்வித வாய்மொழி சாட்சியங்களும் இல்லை. ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**<u>தீர்வு:</u>**

**7)** இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டன. மேற்படி அசல் வழக்கானது, மனுதாரர்கள்/வாதிகளால்

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா சொத்துக்களைப் பொறுத்து நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது. மேலும், மேற்படி அசல் வழக்கானது மனுதாரர்கள்/வாதிகளால் தாவா A பட்டியல் சொத்துக்களை, வாதிகள் தங்கள் விருப்பப்படி அமைதியான முறையில் அனுபவித்துக் கொண்டு, தாவா B பட்டியலில் உள்ள 4ம் இனச் சொத்தில் உள்ள போர்வெல் கிணற்றில் இருந்து, 5ம் இனச் சொத்தில் உள்ள குடியிருப்பு வீட்டிற்கு நிலத்தடி குடிநீர் குழாய் அமைத்து, குடிநீர் பெற்றும், அதன் மேல் நிலப்பரப்பில் 4ம் இனச் சொத்திலிருந்து, 5ம் இனச் சொத்தில் உள்ள வீட்டிற்கு சென்று வர பாதையாகவும் பயன்படுத்திக்கொண்டு அனுபவம் செய்து வருவதாகவும், பிரதிவாதிகள் ஒன்று சேர்ந்து கொண்டு வாதிகளின் அமைதியான சுவாதீன அனுபவத்தை இடைஞ்சல் செய்து வருவதாகவும், மேற்படி நிலத்தடி குடிநீர் குழாயை சேதப்படுத்தும் நோக்கத்தில் பிரதிவாதிகள் வாதிகளிடம் வீண் தகராறு செய்து வருவதாகவும், மேற்படி செய்கையை தடை செய்ய வேண்டி மேற்படி அசல் வழக்கானது பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது.

**8)** இந்நிலையில், மனுதாரர்கள்/வாதிகளால் மேற்படி அசல் வழக்கில் இடைக்கால மனு எண்.3/2025ஆனது உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 26, விதி 9ன் கீழ் தாவா சொத்துக்களை நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து பார்வையிட்டு, அதன் பூஸ்துதி மற்றும் நிலத்தடி குடிநீர் அமைப்பு பற்றி அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையர் நியமனம் வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி, மனுவில் மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வாதுரைக்காக வாய்தா போடப்பட்டிருந்த நிலையில், மேற்படி தாவா சொத்துக்களைப் பொறுத்தும், தாவா சொத்துக்களில் பிரதிவாதிகளால் ஏற்பட்ட பிரச்சினைகள் குறித்தும், வாதிகள் தரப்பில் உள்ள

ஆதரவுகளை மேற்படி இடைக்கால மனுவில் தாக்கல் செய்ய அனுமதி வேண்டி, இம்மனுவானது மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

9) இந்நிலையில், மனுதாரர்கள் தரப்பில் மனுவில் கண்ட ஆதரவுகள் தற்போதுதான் மனுதாரர்கள் வசம் கிடைக்கப்பெற்றது என்றும், மேற்படி ஆதரவுகளை முன்பே தாக்கல் செய்ய தவறிய தவறுகையை மன்னித்து தற்போது ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியமும், நியாயமும் மனுதாரர்கள் பக்கமே உள்ளது என்றும், இம்மனுவை ஏற்றுக்கொள்வதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித கஷ்டமும், நஷ்டமும் ஏற்படாது என்றும், மாறாக இம்மனுவை அனுமதிக்காவிட்டால் மனுதாரர்களுக்கு அதிகப்படியான இழப்பு ஏற்படும் என்று கூறி வாதிடப்பட்டது. மாறாக, எதிர்மனுதாரர்கள் தரப்பில், இம்மனுவானது தேவையற்று தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், இம்மனுவிலும் பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள காரணங்கள் பொய்யானதும், கற்பனையானதும் என்றும், இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டி வாதிடப்பட்டது.

10) இரு தரப்பு வாதங்களையும், வழக்கு கோப்புகளையும் நன்கு கவனமுடன் பரிசீலனை செய்கையில், தாவா சொத்தைப் பொறுத்து மனுதாரர்களால் மனுவில் கண்ட ஆவணங்களை மேற்படி இ.ம.எண்.3/2025ல் மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்ய அனுமதி வேண்டி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுவில் மனுதாரர்களால் கூறப்பட்டுள்ள காரணங்களானது ஏற்றுக்கொள்ளும்படியாக உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேற்படி அசல் வழக்கு மற்றும் இடைக்கால மனுவை தீர்மானம் செய்ய மனுவில் கண்ட ஆவணங்களை மனுதாரர்கள் தரப்பில் கூடுதல் ஆவணங்களாக குறியீடு செய்ய அனுமதி அளிப்பது நீதியின் பொருட்டு அவசியமும், நியாயமும் ஆகும் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும், இம்மனுவை அனுமதிப்பதால்

எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. அசல் வழக்கில் இடைக்கால மனுவில் எழுந்துள்ள பிரச்சினைகளை பொறுத்து தீர்வு காண்பதற்கு இம்மனுவை அனுமதிப்பதே உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. இரு தரப்பினர்களுக்கும் தகுந்த வாய்ப்புகள் வழங்கப்படாமல் இந்நீதிமன்றத்தால் நீதி பரிபாலனமானது வழங்கமுடியாது என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே, நீதியின் நலன் கருதி இம்மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்துள்ளது.

**முடிவு:**

மேற்சொன்ன காரணங்களுக்காக, இம்மனுவானது அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது, என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பு எடுக்கப்பட்டு, பின்பு கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16ம் தேதியாகிய இன்று அவையறிய பகிரப்பட்டது.

YUGHATHY MARIYA
Digitally signed by YUGHATHY MARIYA
Date: 2026.03.16 17:34:27 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**குளித்தலை**

**மனுதாரர் தரப்பு சாட்சி சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** – இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** – இல்லை

YUGHATHY MARIYA
Digitally signed by YUGHATHY MARIYA
Date: 2026.03.16 17:34:32 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**குளித்தலை**